## இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் - 2016

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் (“கூட்டுத்தாபனம்”) 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டின் போதான கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 2. நிதிக்கூற்றுக்கள்

#### 2.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

இந் நிதிக்கூற்றுக்களினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பு முகாமைத்துவத்திற்குக் காணப்படுகின்ற போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2 கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பான கருத்துரைகள்

##### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு வகைகளுக்கு எதிரே கீழே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| வகை | | பெறுமதி | கிடைக்கப் பெறாத சான்று |
|---|---|---|---|
| (அ) | சேவை பிரிவின் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 543,895,470 | விபரமான பட்டியல்கள் |
| (ஆ) | செலுத்தவேண்டிய வரிகள் | 488,204,669 | வயதுப்பகுப்பாய்வு |

##### 2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 3,518,915,427 தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதியில், கடன்பட்டோர் மீதிகளின் 95 சதவீதத்திற்கும் அதிகமானவை அரச நிறுவகங்களிடமிருந்து பெறவேண்டிய தொகைகளினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் அவற்றில் ரூபா 969,867,663 தொகையொன்று அல்லது 28 சதவீதத்திற்குச் சமமான தொகை 05 வருடங்களுக்கும் மேலாக அறவிடப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(ஆ) 05 வருடங்களுக்கும் அதிகமாக நாளாவித கடன்பட்டோராக கணக்குகளுக்கு ரூபா 7,450,055 தொகையொன்று தொடர்ச்சியாகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அறவிடுவதற்கோ அல்லது தொடர்புடைய தரப்பினர்களினை இனங்காண்பதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்வேறு நோக்கங்களுக்கு மற்றும் பல்வேறுபட்ட தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 115,801,112 மற்றும் ரூபா 159,646,390 கூட்டுத்தொகையான முற்பணங்கள் முறையே மூன்று வருடங்கள் மற்றும் ஐந்து வருடங்களுக்கும் அதிகமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விபரிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் விபரிக்கப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம், உள்ளபடியான செலுத்தவேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 11,043,549 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், அது பட்டியல்களில் ரூபா 4,792,320 ஆகக் காட்டப்பட்டது. ஆகையினால் அந்த இரண்டு எண்ணிக்கைகளுக்கிடையே ரூபா 6,251,229 விபரிக்கப்பட்டாத, வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகள் கடன்பட்டோர் உறுதிப்படுத்தல்களுக்கிடையே ரூபா 148,801,970 கூட்டுத்தொகையான வித்தியாசங்கள் காணப்பட்டது. இந்த வித்தியாசங்களுக்கான காரணங்கள் கணக்காய்விற்கு விபரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசின் நிதிப்பிரமாணங்களின் 396(ஈ) நிதிப்பிரமாணம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 06 மாதங்கள் காலப்பகுதியொன்றுக்கு மேலலாக செலுத்துகைக்கு சமர்ப்பிக்ககப்பட்டிராத ரூபா 289,188 பெறுமதியுடைய 5 காலங்கடந்த காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் (வீஏரீ) சட்டத்தின் iii ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து ரூபா 8,321,188 உள்ளீட்டு வீஏரீயும் ரூபா 33,000,669 வெளியீட்டு வீஏரீயும் எழுந்திருந்த போதிலும், வீஏரீ மீதான திரும்பல்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் (என்பீரீ) சட்டம் | மீளாய்வாண்டுடன் தொடர்புடைய என்பீரீ மீதான திரும்பல்கள் வேண்டப்பட்டவாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2009 யூலை 01 ஆந் திகதிய டீஎம்ஏ/2009 (2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட தகவல் வேண்டப்பட்டவாறு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை. | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்களுக்கான தனியானதொரு நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம், 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிச் சட்டம் | 2006 சனவரியிலிருந்து 2015 யூலை வரை ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவு படிகள் மீது தொடர்புடைய நிதிகளுக்கு முறையே ரூபா 307.82 மில்லியன் மற்றும் ரூபா 41.97 மில்லியன் பங்களிப்புக்கள் அனுப்பப்படாமை காரணமாக, கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு முறையே ரூபா 153.91 மில்லியன் மற்றும் ரூபா 20.98 மில்லியன் மிகைக்கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டியுள்ளது. |
| (எ) | கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் விநியோகிக்கப்பட்ட 1979 திசெம்பர் 20 இன் 121/1979 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(இ) பிரிவு | கட்டளைகளுடன் காசோலைகளில் முற்பணங்கள் வழங்கப்படுகையில், 30 நாட்கள் காலப்பகுதியினுள் அவ்வாறான முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், வழங்கப்பட்ட ரூபா 77,540,015 கூட்டுத்தொகையான அவ்வாறான முற்பணங்கள் 03 வருடங்களுக்கும் மேலாக தீர்ப்பனவு செய்யப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கங்களாவன:

(i) கட்டிடங்கள், சிவில் பொறியியல் மற்றும் ஏனைய பொறியியல் செயற்திட்டங்களின் புலனாய்வு, திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்.

(ii) ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளின் ஏற்பாடு

(iii) ஆதன அபிவிருத்தி வேலைகளினை மேற்கொள்ளல்

(iv) தயாராகவுள்ள கான்கீரீட் கலவை வலுப்படுத்தப்பட்ட கான்கீரீட் மற்றும் முற் - அழுத்த கான்கிரீட் உற்பத்திகள் தயாரிப்பு மற்றும் விற்பனை.

(v) பொறியியல் செயற்திட்டங்கள்∴பெறுபோற்கப்பட்டவற்றிக்குத் தேவையான நிர்மாண மூலப்பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி, விற்பனை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி.

(vi) பொறியில் மற்றும் தொழில்நுட்ப நபர்களுக்கான பயிற்சியளித்தல்.

(vii) மேற்குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்ட நிர்மாண மூலப்பொருட்கள், முறைமைகள் மற்றும் நுட்பங்களுக்குள் ஆய்வுகளினை மேற்கொள்ளுதல்.

மேற்குறித்த நோக்கங்களினை அடைந்து கொள்ளும் பொருட்டு 2016 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட பிரதான செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் கூட்டுத்தாபனத்தின் நிர்மாணப்பிரிவினால் கையேற்கப்பட்ட 257 நிர்மாண செயற்திட்டங்களில், 109 நிர்மாண செயற்திட்டங்களுக்கு எவ்வித செலவினங்களும் ஏற்பட்டிருக்கவில்லை.

(ஆ) 13 நிர்மாண செயற்திட்டங்களின் செயலாற்றல் பூச்சிய மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தினால் கையேற்கப்பட்ட ஏனைய பிரதான செயற்திட்டங்களின் செயலாற்றல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் - மாத்தளை மாவட்டம்**

---

2011 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கூட்டுத்தாபனத்திற்கு 52 வீதி நிர்மாண செயற்திட்டங்கள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தங்கள் 06 மாதங்கள் காலப்பகுதியொன்றுக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) செலுத்துகைகள் ஆலோசனையாளரினால் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) சான்றுறுதிப்படுத்தப்பட்டிராமையினால் உப - ஒப்பந்தார்க்கு ரூபா 42,428,732 மிகைசெலுத்துகையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 90 சதவீதத்திற்கும் அதிகமாகப் பூர்த்தியடைந்து காணப்பட்ட 11 நிர்மாண செயற்திட்டங்கள் தொடர்பில் அறவிடப்படாது ரூபா 43.96 மில்லியன் தொகையொன்று தொடர்ந்தும் காணப்படுகின்றது.

**மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் - இரத்தினபுரி மாவட்டம்**

---

(i) ரூபா 34.11 மில்லியன் மற்றும் ரூபா 26.8 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியுடன் 02 விதிகளின் நிர்மாணத்திற்கான உப ஒப்பந்தங்கள் 2011 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாண வேலைகள் 2017 மார்ச் 31 வரையிலும் நிபந்தனைகளின் பிரகாரம் அந்த உப ஒபந்தார்களிடமிருந்து ரூபா 7.46 மில்லியன் மற்றும் ரூபா 06 மில்லியன் நகர்வு முற்பணங்கள் மற்றும் ரூபா 3.4 மில்லியன் மற்றும் ரூபா 2.6 மில்லியன் தாமதக் கட்டணங்களினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், குறித்த உப ஒப்பந்ததாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் மற்றும் நுகர்வு முற்பண முறிகளின் செல்லுபடியாகும் காலம் கடந்திருந்தது.

(ii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் சான்றுறுதிப்படுத்தப்படாத பட்டியல்களின் விளைவொன்றாக, தெப்பனவ - கொரகெல வீதியின் உப ஒப்பந்ததார்க்கு ரூபா 1,550,945 மிகை செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) கஹங்கம பகுதி மற்றும் கொஸ்கல பகுதியின் நிர்மாண வேலைகள் 2011 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும், உப ஒப்பந்ததாரினால் இணங்கப்பட்டவாறு அது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், உப ஒப்பந்ததாரரிடமிருந்து ரூபா 5,389,574 தாமதக் கட்டணங்களினை கூட்டுத்தாபனம் அறவிட்டிருக்கவில்லை.

**(இ) உள்நாட்டு இறைவரித் திணைக்கள கட்டிடத்தின் புனர்நிர்மாணம் மற்றும் கார் தரிப்பிடங்களின் நிர்மாணம்**

---

(i) 2009 திசெம்பர் 13 இற்கு முன்னர் புனர்நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அது 2018 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிர்மாண வேலைகளில் தாமத்தினால் ஒப்பந்த விலையிலிருந்து தாமதக் கட்டணங்களாக ரூபா 27,244,208 தொகையொன்றை அறவிடுவதற்கு அவர்களினால் நடவடிக்கை எடுக்கப்படுமென கூட்டுத்தாபனத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்திருந்தது.

(iii) குறித்த வாகனத் தரிப்பிடத்தில் பாரம்தூக்கிகளின் ஸ்தாபிப்பிற்கான ஒப்பந்தம் டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியரிங் கம்பனிக்கு அளிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகளினை தாமதப்படுத்தியதன் அடிப்படையில் இழப்பீடாக ரூபா 96.94 மில்லியனை கோருவதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக சட்ட வழக்கொன்றை இந்தக் கம்பனி தாக்கல்செய்திருந்தது.

(ஈ) அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட 08/சீ/73/344/002 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் தன்னகத்தே செயற்படுத்தப்படுகின்ற ஒப்பந்தங்களின் பேரம்பேசல் தொடர்பில் முற்பண வழங்குதல் மற்றும் செயலாற்றல் முறிகள் / பிணைகளினை வழங்குவதிலிருந்து கூட்டுத்தாபனம் விதிவிலக்களிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த தீர்மானத்தின் பிரகாரம் உப ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 104,152 மில்லியன் பெறுமதியுடைய அவ்வாறான ஒப்பந்தங்கள், உப ஒப்பந்தங்களுக்கு வழங்கப்பட்ட வேலைகளுக்கு இந்த விதிவிலக்களிப்புக்கள் பிரயோகிக்கப்படவில்லை.

## 3.2 தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திரவியல் நிறுவகத்தின் செயற்பாடு (என்ஈஎம்ஓ)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டில் இயந்திரங்களினை வாடகைக்கு விடுவதினூடாக உழைக்கப்பட்ட வருமானம் தொடர்பில் ரூபா 7,695,261 தொகையான பெறுமதி சேர் வரியொன்று விதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு தீர்ப்பனவு செய்யப்படவேண்டிய பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி முறையே ரூபா 123.84 மில்லியன் மற்றும் ரூபா 7.8 மில்லியன் தொகை தீர்ப்பனவு செய்யப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(இ) தேசிய வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய ரூபா 253.8 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 1,190,229 ஆன தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மீதான வெளித்திரும்பல் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் அறவிடுகை 2018 சனவரி 31 வரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(உ) வங்கி மேலதிகப்பற்று வசதியின் அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூபா 6.8 மில்லியனால் மிகைத்திருந்தது. மேலும், மேலதிகப்பற்றிக்கான வட்டி ரூபா 15.8 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) தீர்ப்பனவு செய்யப்பட்டிராது 2012 ஆம் ஆண்டிலிருந்து வங்கி இணக்கக் கூற்றில் இனங்காணப்படாத செலவுவைத்தல்கள் மற்றும் வரவு வைத்தல்கள் முறையே ரூபா 1,328,763 மற்றும் ரூபா 111,605 தொகைகள் காணப்பட்டிருந்தது.

(எ) தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பின் பிரகாரம், 05 நிர்மாண செயற்திட்டங்கள் தொடர்பில் அவற்றிற்கு தொடர்புடைய தரப்பினர்களுடன் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிராமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும், ஒப்பந்தகாரர்களினை தெரிவுசெய்வதற்கு எவ்வித பெறுகை நடைமுறைகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இந்த நிறுவகத்தின் கீழ் செயற்படுத்தப்படும் 17 வேலைத்தளங்களில், 09 வேலைத்தளங்கள் 2016 ஆம் ஆண்டில் ரூபா 22.02 மில்லியன் நட்டமொன்றைத் தாங்கிக்கொண்டிருந்தது.

(ஐ) நிறுவகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 344 ஆகக் காணப்பட்ட போதிலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான பதவியணியினர் 754 என குறிப்பிடப்பட்டது. இருப்பினும், 410 மிகை ஊழியர்களுக்களுக்கான அங்கீகாரம் நிறுவகத்தினால் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஒ) ரூபா 465,516 ஆன கட்டளை முற்பணத்துடனான காசோலை, இந்த அறிக்கையின் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) இயந்திரவியல் தளத்தில், 91 இயந்திரங்கள் சேவைக்கு உகந்ததல்லாத நிலைமையில் காணப்பட்டிருந்தது.

### 3.3 கூட்டுத்தாபனத்தின் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகள்

நிர்மாணப் பிரிவு, நிர்மாண மூலக்கூறுப் பிரிவு, இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு, விசேட செயற்பாடுகள் பிரிவு மற்றும் ஆலோசனைப் பிரிவு போன்ற ஐந்து பிரிவுகளுடன் கூட்டுத்தாபனம் செயற்படுத்துகின்றதுடன் ஒவ்வொரு பிரிவினதும் செயலாற்றல் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டது.

#### (அ) நிர்மாண பிரிவு

மீளாய்வாண்டின் போது, இரத்மலானையிலுள்ள அலுமினியம் தொழிற்சாலை மற்றும் இந்த பிரிவுக்குச் சொந்தமான மாளிகாவத்தையிலுள்ள இயந்திரவியல் வாடகைத் தளத்தினால் எவ்வித வருமானமும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) நிர்மாண மூலக்கூறு பிரிவு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இரத்மலானயிலுள்ள பிரிகாஸ்ட் (precast) மற்றும் தொடர்பில் வருமானம் மற்றும் செயற்பாட்டு இலாபத்தில் முறையே 24 சதவீதம் மற்றும் 9.16 சதவீதத்தினால் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. மேலும், மீளர்யவாண்டின் போது 71 சதவீதத்தினால் விற்பனைகள் வருமானத்தில் அதிகரிப்பொன்று அறிக்கையிடப்பட்ட போதிலும் தன்கொடுவயிலுள்ள தச்சுப்பொருட்கள் முற்றம் கடந்த 18 வருடங்களாக நட்டத்தில் தொடர்ச்சியாக ஓடிக்கொண்டிருக்கின்றது. அதேவேளை, பெஹலியகொடயிலுள்ள பிரிகாஸ்ட் முற்றம் முன்னைய ஆண்டில் அத்துடன் மீளாய்வாண்டின் போது எவ்வித வருமானத்தினையும் உருவாக்கியிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது ரூபா 115,296 செலவினமொன்று ஏற்பட்டது.

#### (இ) இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு

(i) பேஹலியகொடயிலுள்ள 102 ஆம் இலக்க தளம் மற்றும் 104 ஆம் இலக்க தள செயற்பாட்டு முற்றம் முறையே 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டிலிருந்து நட்டத்தில் தொடர்ச்சியாக ஓடியிருந்ததுடன் 102 ஆம் இலக்க தளத்தினால் 2013 ஆம் ஆண்டில் ரூபா 1.6 மில்லியன் நட்டம் அறிக்கையிடப்பட்டதுடன் மீளாய்வாண்டில் ரூபா 45 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அதேவேளை, 2013 ஆம் ஆண்டில் 104 ஆம் இலக்க தளத்தினால் அறிக்கையிடப்பட்ட ரூபா 7.43 மில்லியன் இலாபமொன்று மீளாய்வாண்டில் ரூபா 49 மில்லியன் நட்டமொன்றாக மாறியது.

(ii) மாத்தளையிலுள்ள டாலமைட் செயற்படுத்தல் திட்டம் (1100 ஆம் இலக்க தளம்) 2006 ஆம் ஆண்டைத் தவிர கடந்த 17 ஆண்டுகளாக நட்டத்தில் தொடர்ச்சியாக ஓடுகின்றது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டில் ரூபா 10 மில்லியனாகக் காணப்பட்ட செயற்பாட்டு நட்டம் மீளாய்வாண்டில் ரூபா 6 மில்லியனுக்கு அல்லது 37 சதவீதத்தினால் குறைவடைந்தது.

(iii) இரத்மலான முற்றம் (888 ஆம் இலக்க தளம்) விற்பனைகள் கிரயம் மற்றும் ஏனைய செலவினத்தின் அதிகரிப்புக் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 21.81 மில்லியன் செயற்பாட்டு நட்டமொன்றினை தாங்கிக் கொண்டது.

**(ஈ) விசேட செயற்பாடுகள் பிரிவு**

குலபெத நிலக்கீல் பொறி (Asphalt Plant) இற்கு மூலப்பொருட்களின் விநியோகத்திற்கு மீளாய்வாண்டில் விநியோகஸ்தர்களுக்கு ரூபா 28,642,269 தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்ட போதிலும், ரூபா 13,016,723 பெறுமதியுடைய மூலப்பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த செயற்திட்டத்திற்கு 2016 திசெம்பர் 25 வரை 02 வருடங்கள் காலப்பகுதிக்கு ரூபா 1,800,000 வாடகையொன்று செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், உற்பத்தி செயற்பாடுகள் 03 நாட்களுக்கு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையினால், ரூபா 25,580,485 திரண்ட நட்டமொன்று இந்த செயற்திட்டத்தினால் தாங்கிக்கொள்ளப்பட்டது.

## 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பெறுமதி சேர் வரி, பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் தேசத்தைக் கட்டியொழுப்பும் வரி என்பவற்றை உரிய நேரத்தில் செலுத்தாமை காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் ரூபா 124,823,483 மிகைக்கட்டணமொன்று விதிக்கப்பட்டிருந்தது. மேலும், பெறுமதி சேர் வரி மற்றும் பொருளாதார சேவைக்கட்டணம் முறையே ரூபா 472,732,052 மற்றும் ரூபா 53,898,882 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 'சீ-சிட்டி செயற்திட்டத்தின்' வியாபாரக் கடைகளின் ஒதுக்கீட்டுற்கு 2013 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியின் போது திறவுகோள் பணமாக (Key money) பல்வேறு அமைப்புக்களிடமிருந்து ரூபா 94.44 மில்லியன் தொகையொன்று பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், திறவுகோள் பணமாக ரூபா 735,000 இனைச் செலுத்திய வாடிக்கையாளரொருவர் ரூபா 1 மில்லியனாகக் கோருவதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக சட்ட வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார்.

(ஆ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பெறுமதி சேர் வரிக்கான பதிவு ரத்துச் செய்யப்பட்டுக் காணப்பட்ட 03 விநியோகஸ்தர்களுக்கு 2016 ஆம் ஆண்டுகளில் பெறுமதி சேர் வரியாக ரூபா 341,368 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தொடர்புடைய விற்பனையாளர்களினை இனங்கண்டிராது செலுத்தப்பட்ட முற்பணக் கணக்குகளில் ரூபா 60,974,121 கூட்டுத்தொகையான செலவு மீதிகள் காணப்படுகின்றது.

## 3.6 ஏனைய அரச நிறுவகங்களுக்கு விடுவிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சிற்கு இருபத்தி நான்கு ஊழியர்கள், மாகாண அமைச்சிற்கு ஒரு உத்தியோகத்தரும் மற்றும் நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபைக்கு நான்கு ஊழியர்களும் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

## 3.7 விளைவற்ற சொத்துக்கள்

ரூபா 610,000 கிரயத்தினையுடைய மூன்று வாகனங்கள் மற்றும் டிரெய்லர்கள் மற்றும் கிரயம் கிடைக்கக் கூடியதாக மேற்கொள்ளப்படாத டபள் கெப் வாகனமொன்று மற்றும் ரூபா 3,500,000 கிரயமான இயந்திரங்கள் அவற்றிக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராது தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது.

## 3.8 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிரந்தர அடிப்படையில் சிரேஸ்ட முகாமைத்தவ மட்டத்திலுள்ள அதிகமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்களினை மேற்கொள்ளும் பொருட்டு, 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்தினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை, ஆனால் உயர் சம்பள அளவிடைகளின் கீழ் சிரேஸ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ள 05 பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 26 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினிலுள்ள பதவியொன்றிற்கு மாத்திரம் நியமனமொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். இருப்பினும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 41 பதவிகளுக்கு 624 மிகையான ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) 2006 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய, 28(ii) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2009 நவம்பர் 25 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் டீஎம்எஸ்/ஈ3/43/4/265/1 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி வெற்றிடங்கள் நிரப்பப்படக்கூடாது அல்லது புதிய பதவிகள் உருவாக்கப்படக் கூடாதென அறிவிக்கப்பட்டிருந்தது. II அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்கு 15 ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆவற்றிலிருந்து 07 பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட ஊழியர்களின் நியமனங்களின் நிரந்தரத்தினை மேற்கொள்வது கணக்காய்வில் கேள்விக்குரியதாகக் காணப்படுகின்றது.

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 கூட்டிணைந்த திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதி 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 - 2021 ஆம் காலப்பகுதிக்கு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளினை அடைந்துகொள்ளத்தவறிய பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவினதும் சராசரி அதிகுறைந்த வருடாந்த வருமானத்தை 5 சதவீதத்தினால் முன்னேற்றுவதற்கு மற்றும் செயற்திட்டங்களிலிருந்து 5 சதவீத வருடாந்த மேலதிக வருமானத்தினை உழைப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் வருமானம் பற்றாக்குறையாக இருந்தது.

(ஆ) கடன்களின் அறவிடுகைக்கான முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு மற்றும் 20 சதவீதத்தினால் தற்போதைய கடன் மட்டத்தினைக் குறைப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்த போதிலும், கடன்களின் தொகை எதிர்ப்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு குறைவடைந்திருக்கவில்லை.

(இ) வியாபார செயற்பாடுகளின் பல்வகைப்படுத்தல்களின் கீழ், புதிய வருமானம் உழைக்கும் துறைகளின் இனங்காணல் மற்றும் வியாபார செயற்பாடுகளின் விரிவாக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டமொன்றினை கூட்டுத்தாபனம் தயாரிக்கவில்லை. 2017 தொடக்கம் 2021 வரையான காலப்பகுதிக்கு செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும், அவற்றில் பின்வரும் முக்கிய வகைகள் உள்ளடக்கப்படவில்லை.

- வருடாந்த பாதிடு (வருமானம், செயற்பாட்டுச் செலவினங்கள், அபிவிருத்தி செலவினங்கள், நிதிக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடங்களாக)
- முன்மொழியப்பட்டுள்ள பாரிய முதலீடுகள், இயளளவினை கட்டியெழுப்பல் மற்றும் பாரிய பெறுகைகள்.
- மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டம்
- கடன் மீள்செலுத்துகைத் திட்டம்
- உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 46 சதவீதம் தொடக்கம் 70 சதவீதம் வரையான வீச்சில் முக்கியமான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால், பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டில் வினைத்திறனான கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என சுட்டிக்காட்டுகின்றது.

### 4.4 வருடாந்த அறிக்கைகளினை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 யூலை 20 வரையிலும் பாராளுமன்றத்தில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) செலுத்தவேண்டிய வரிகள் மற்றும் அவற்றின் மீதான மிகைக்கட்டணங்களினை இணக்கஞ்செய்யத்தவறியமை.<br><br>(ii) கட்டுப்பாட்டுக் கணக்குகளினை இணக்கஞ்செய்யத் தவறியமை. |
| (ஆ) | நிதிக்கட்டுப்பாடு | (i) கட்டளைகளுடன் காசோலைகளினூடாக முற்பணங்களினை அளித்தல்.<br>(ii) நீண்டகால நிலுவையாகவுள்ள கடன்பட்டோர்கள் அறவிடப்படாமை.<br>(iii) வாடிக்கையாளர்களுக்கு பற்றுச்சீட்டுக்களினை சமர்ப்பிப்பதில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள்<br>(iv) தீர்ப்பனவு செய்யப்பட்டிராது நீண்டகாலப்பகுதியொன்றுக்கு மேலாக கொள்வனவு முற்பணங்கள் காணப்படுகின்றமை.<br>(v) நிர்மாணங்களுடன் தொடர்புடைய நீண்டகால பிடிகாசினை தீர்ப்பனவு செய்யத் தவறியமை. |
| (இ) | ஆளணி நிர்வாகம் | (i) ஏனைய நிறுவகங்களுக்கு மனித வளங்களினை விடுவித்தல்<br>(ii) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து ஊழியர்களினை ஆட்சேர்ப்புச் செய்கின்றமை.<br>(iii) ஒப்பந்த அடிப்படையில் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளுக்கு உத்தியோத்தர்களினை ஆட்சேர்ப்புச் செய்கின்றமை. |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | விளைவற்ற சொத்துக்களினை முறையாகப் பயன்படுத்துவதற்கு மற்றும் காணிகளின் உரிமையினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கத்தவறியமை. |
| (உ) | இரும்புக் கட்டுப்பாடு | அனைத்து தளங்களிலும் வருடாந்த மெய்மையாய்வை நடாத்துவதற்கு தவறியமை. |